1967 நவம்பர் 24]

THE HON. THIRU C. N. ANNADURAI : Dispersal of power is not necessarily to be construed as reorganisation.

திரு. இராம. அரங்கண்ணல்: முன்பிருந்த அரசு கல்வித் துறைக்கு செலவு செய்ததைவிட இப்போதுள்ள அரசு அதிகமாகக் கல்விக்குச் செலவு செய்வதாலும், புதிய பள்ளிகள், கல்லூரிகள் இவற்றை நல்ல முறையில் நடத்த வேண்டுமென்ற எண்ணத்தினாலும் சீரமைப்பு ஏற்பட வேண்டுமென்று கருதிக் கொள்வதில் தவறு இல்லையென்று கருதலாமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: கனம் உறுப்பினர் அப்படிக் கருதிக்கொள்வதிலே தவறு இல்லை.

DR. H. V. HANDE : When were these two departments, Education and Public Health Departments, actually separated?

THE HON. THIRU C. N. ANNADURAI : We separated it now.

THIRU K. VINAYAKAM : Due to the separation of these departments and the appointment of new Secretaries to the respective departments, what is the financial implication involved in it? Do the Government incur more expenditure now than they have previously incurred?

THE HON. THIRU C. N. ANNADURAI : Fortunately the incurring of expenditure is not significant. As I have stated, no new additional Secretaries have been appointed.

Visit of the Prime Minister to Coimbatore

* 412 Q.—THIRU A. M. RAJA : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether any public meeting was arranged by the Collector of Coimbatore in January-February 1967, when the Prime Minister of India visited Coimbatore; and

(b) if so, the expenditure incurred by the Collector?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : (அ) ஆம்.

(இ) கோயம்புத்தூரில், இந்தியத் தலைமை அமைச்சர் உரை நிகழ்த்திய பொதுக்கூட்டத்திற்காக ரூ. 17,115-00 செலவு ஏற்பட்டது.

திரு. ஏ. எம். ராஜா : சட்டமன்றத் தலைவர் அவர்களே, தேர்தல் பிரசாரக் கூட்டம் ஏற்பாடு செய்ததால், அந்த அதிகாரி மீது ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : தமிழ்நாடு முழுவதிலும் பொதுக்கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. சென்னை, கோவை, உதகமண்டலம், மதுரை, திருச்சி ஆகிய இடங்களில் இந்தியப் பிரதமர் கலந்து கொண்ட கூட்டங்களுக்காக ஆன மொத்த செலவு 1,10,774 ரூபாய். அதிலே 17,115 ரூபாய் கோயம்புத்தூருக்குச் செலவானது. பிரதமர் அவர்கள் தேர்தல் நேரத்தில்

வந்ததால், தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டதால். அதற்கான செலவைத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தர வேண்டுமென்று கேட்கப்பட்டிருக்கிறது. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி அதுபற்றி கவனப்படுத்தப்பட்டது.

திரு. எஸ். இராமச்சந்திரன் : ஐயா, இந்தியப் பிரதமர், தேர்தல் பிரசார சுற்றுப்பயணத்தை மேற்கொண்டபோது கூட்ட நிகழ்ச்சிகள் மாவட்ட அதிகாரிகளால் ஏற்பாடு செய்யப்பட்ட காரணத்தை சர்க்கார் தெரிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: தேர்தல் பிரச்சாரத்திற்கு வந்தார்கள் என்றாலும், அவர் இந்தியாவின் பிரதமர் என்ற முறையில் அவருடைய கூட்டங்களை ஒழுங்குபடுத்த வேண்டியது மாவட்ட அதிகாரிகளுடைய கடமையாகும். மேலும், பொது மக்கள் ஏராளமான அளவில் கலந்துகொள்வார்கள் என்பதால் பொதுவாக அமைதியைப் பாதுகாக்க மேல்மட்டத்தில் உள்ள அதிகாரிகள் ஏற்பாடு செய்தார்கள்.

திரு. டி. எஸ். ஆதிமூலம் : சார், இந்தப் பொதுத் தேர்தல் நான்காம் பொதுத் தேர்தல் என்று நினைக்கிறேன். இதற்கு முன்னால் இருந்த பிரைம் மினிஸ்டர் உயர்மட்டத்திலுள்ளவர்கள் முக்கியமாக பொதுப்பணத்தைக்கொண்டு தேர்தல் கூட்டங்களை ஏற்பாடு செய்யக்கூடாது என்று முன்மாதிரியாக யாராவது இருந்தார்களா என்பதைச் சர்க்கார் தெரிவிக்குமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கனம் உறுப்பினர் கேட்ட கேள்விக்கு என்னால் பதில் சொல்ல இயலவில்லை. இந்தியாவின் முதல் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள்தான்.

திரு. கே. விநாயகம் : இந்தியப் பிரதமர் தென்னகச் சுற்றுப் பணத்தின்போது தேர்தல் பிரசாரத்திற்காக மட்டும் வரவில்லை. நாட்டு மக்களுடைய நன்மையைக் கருதித்தான் சுற்றுப்பயணம் செய்தார். காங்கிரஸ் கட்சிக்காக அவர் சுற்றுப்பயணம் செய்ய வரவில்லை என்று அமைச்சர் அவர்களுக்குத் தெரியப்படுத்துகின்றேன். நம்முடைய அமைச்சர் அவர்கள் இடைத் தேர்தல் வருகின்ற நேரத்தில்கூட தேர்தல் பிரசாரத்திற்குப் போக மாட்டார்கள் என்று சொல்ல முடியுமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : நம்முடைய காங்கிரஸ் உறுப்பினர் திரு. விநாயகம் அவர்கள் சொல்வதற்கும், அவருடைய தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கும் முரண்பாடு இருப்பதைப்பற்றிக் கூற விரும்புகிறேன். அந்தச் செலவினத்தைத் தருவதற்கு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி இசைவு அளித்திருக்கிறார்கள். பிரதமர் அவர்கள் பேசிய கூட்டங்களில் பொதுவாக நாட்டுமக்கள் பயன்படத்தக்க கருத்துக்கள் நிச்சயம் இருக்கின்றன என்பதை ஒப்புக்கொள்கிறேன். அந்த அளவில் அல்லாமல், அவர் காங்கிரஸுக்கு ஓட்டு அளியுங்கள் என்று கேட்டதாலேயே அதற்கான செலவினத்தைத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தரவேண்டுமென்று கேட்டிருக்கிறோம்.

1967 நவம்பர் 24]

திரு. க. மு. ராஜகோபால்: தலைவர் அவர்களே, ஒரு நாட்டினுடைய பிரதமர் மட்டுமல்ல, பல்வேறு இயக்கத்தை—கட்சியைச் சேர்ந்தவர்கள் மாநிலங்களிலே வந்து தேர்தல் பிரசாரம் செய்ய பொதுமக்களுடைய பணத்தை விரயம் செய்வது நியாயமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை: இதிலே பொது மக்களுடைய பணம் விரயம் ஆகத் தேவையில்லை. தனிப்பட்ட அரசியல் கட்சி ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

திரு. இராம. அரங்கண்ணல்: சார், இந்த லட்சத்துக்கும் மேற்பட்ட தொகையை முன்பு ஆண்ட காங்கிரஸ் அரசாங்கமே செலவழித்திருக்கிறது. தேர்தல் கூட்டத்துக்கான செலவுத் தொகையைத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியைக் கேட்டிருக்கிறோம் என்று முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இப்போது வந்திருக்கிற யூகமும், புத்திசாலித்தனமும் அப்போது ஏன் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டிக்கு ஏற்படவில்லை?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை: இந்த அரசு வந்த பிறகுதான் இதைக் கேட்டது என்பதை கனம் உறுப்பினர் யூகித்துக்கொண்டிருப்பார்கள். தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியிடமிருந்து அந்தப் பணத்தைப் பெற வேண்டிய முயற்சிகள் எடுத்துக் கொள்வோம்.

திரு. கரு. சீமைச்சாமி: சார், பிரதமர் இங்கே வந்து சென்றதற்கான செலவைத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தரும் என்று முதலமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். அப்படி அவர்கள் தராமல் போய்விட்டால், அதன்மீது ஏதாவது நடவடிக்கை எடுத்துக்கொள்வார்களா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை: தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தராது என்று நான் கருதவில்லை. அப்படி அவர்கள் தராவிட்டாலும், நானே பொதுமக்களிடத்தில் வசூலித்து அவர்கள் சார்பில் கொடுப்பதாக இருக்கிறேன்.

திரு. கே. விநயகம்: தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி இந்தச் செலவினத்தைத் திரும்பத் தருவது என்பது ஒரு விஷயம். மு.ப. 10-30
அண்மையில் தேர்தல் நடந்தது, மேலும் நடக்கப் போகிறது. இது போல நடக்கிற தேர்தல்களுக்கு இப்போது பதவியில் உள்ள அமைச்சர்கள் பிரச்சாரம் செய்யப் போகிறபோது அவர்களுடைய சுற்றுப் பிரயாணச் செலவை திராவிட முன்னேற்றக் கழகம் தருமா, இந்த அரசாங்கத்திற்கு?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணுதுரை: திராவிட முன்னேற்றக் கழக அமைச்சர்கள் வெளியில் கட்சி சார்பில் போகிறபோது தங்கள் சொந்தச் செலவில் போகவேண்டும் என்றும், அரசு காரியமாகப் போகிறபோது அரசாங்கச் செலவில் போகவேண்டும் என்றும் ஒரு மரபு வகுத்துக்கொண்டிருக்கிறேம். எங்காவது இந்த மரபை மீறியிருந்தால் கனம் உறுப்பினர் அவர்கள் சுட்டிக் காட்டலாம்.

திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி அசலை மட்டும் தர ஏற்றுக்கொண்டிருக்கிறார்களா ? அல்லது இது வரையில் அந்த அசலுக்காகும் வட்டியையும் சேர்த்துத் தர ஏற்றுக்கொண்டிருக்கிறார்களா ?

(பதில் இல்லை)

திரு. எஸ். இராமச்சந்திரன் : பொதுக்கூட்ட நிகழ்ச்சிகளில் அமைச்சர்கள் கலந்துகொள்வது தவறு இல்லை. நிர்வாகத்தில் இருப்பவர்கள் கலந்து கொள்வது என்பது ஜனநாயகத்திற்கே முரணானது என்கிற தத்துவம் இதில் புறக்கணிக்கப்பட்டிருப்பது தெரியுமா? கட்சி சம்பந்தமான கூட்டங்களில் நிர்வாகத்தினர் கலந்து கொள்ளாதிருக்க இந்த அரசு தக்க வழிவகை செய்யுமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : ஜனநாயகத்தில் ஒரு நாட்டின் ஆட்சித் தலைவராக இருப்பவர், அந்நாட்டின் ஓர் அரசியல் கட்சித் தலைவராக இருப்பது என்பது பொருத்தமானது. இதில் இருந்து எது பொதுப் பணி, எது அரசாங்கப் பணி என்று பிரித்துப் பார்ப்பது மிகவும் கடினமானது. ஆனால், அந்தந் தலைவர்களே அதைப்பற்றிய மரபுகளை ஏற்படுத்திக்கொண்டு, அதன்படி எந்தச் செலவை சொந்தத்தில் போட்டுக்கொள்வது, எதை, எதை அரசாங்க இனத்தில் போடுவது என்று தீர்மானிக்கவேண்டும். இப்படி நடக்கவேண்டும் என்பதாக திராவிட முன்னேற்றக் கழக அமைச்சர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

திரு. எம். எஸ். மணி : இந்தியப் பிரதமர் தமிழ்நாட்டுக்கு வந்திருந்தபோது அவரது விஜயம் சம்பந்தமாகச் செலவழிக்கப்பட்ட லட்சக்கணக்கான ரூபாய்களை ஒரு கட்சியிடம் இருந்து எதிர்பார்ப்பது நிறைவேறுமா? அந்தப் பணத்தை அவர்களிடம் இருந்து வசூலிக்கிறபோதே அதற்கான வட்டியையும் வசூலிக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி அந்தப் பணத்தைக் கொடுத்தாலே நல்ல மரபு என்று நான் கருதுகிறேன்.

Salary Savings Scheme

* 413 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Chief Minister be pleased to state whether there is any proposal to allow the N.G.G.Os. to take out policies from L.I.C. and to apply to the Pay Disbursing Officer for deducting the monthly premia from their salaries every month?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : ஆம், அரசுத் தலைமைச் செயலகம், கருவூலங்கள், கணக்குகள் நெறியாளர் அலுவலகம், சம்பள கணக்குகள் அலுவலகம், வருவாய்த் துறை கழகம் (நிலவரி), தலைமைப் பொறியாளர் (பொது) அலுவலகம் ஆகியவற்றில் பணியாற்றும் அரசிதழ் பதிவில்லா அரசு ஊழியர்களைப் பொறுத்தவரையில், முன்னோடியாக, ஆயுள் காப்புறுதிக்